கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடக்கு மாகாண சபை
සමුපකාර සංවර්ධන දෙපාතර්මේන්තුව, උතුරු පළාත්සභාව
**Department of Co-operative Development, Northern Provincial Council**
முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
වැඩිහිටියන් නිවාස සංකීර්ණය, නුවර පාර, කයිතඩි, යාපනය.
Elders' Home Complex, Kandy Road, Kaithady, Jaffna.

My No:- NP/15/04/02/CCD/CI

Date:-2023.01.18

சுற்றறிக்கை – **02/2023**

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும்,

**பொது, மாகாண சபை, மாநகர சபை, நகரசபை, பிரதேச சபைத்தேர்தல்கள்**

மேற்படி தேர்தல்களில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், நிர்வாகசபை உறுப்பினர்கள், பணியாளர்கள் வேட்பாளர்களாகப் போட்டியிடுவதனால், சங்க நடவடிக்கைகளில் இடையூறுகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும், கூட்டுறவுச் சங்கங்களில் அடிப்படை விழுமியங்களை மேம்படுத்தலுடன் அரசியல் ஈடுபாட்டை தவிர்ப்பதற்குமாக பின்வரும் வகையில் செயற்படுதல் உசிதமானதென்பதை அறியத்தருகின்றேன்.

***01.* பொதுக்கூட்டங்கள் -**

*1.1* வேட்புமனுத்தாக்கல் செய்யும் திகதியிலிருந்து உரிய தேர்தல் நடைபெற்று முடிந்து பத்து (10) நாட்கள் கழியும் வரையான காலப்பகுதியில் கிளைக்குழு அல்லது இயக்குனர் சபை தெரிவிற்கான பொதுக்கூட்டங்களை நடாத்தாதிருத்தல்.

***02.* வேட்புமனு தாக்கல் செய்துள்ள தலைவர், துணைத்தலைவர் மற்றும் இயக்குனர்கள்.**

*2.1* வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளமையை சங்கத்திற்கு எழுத்து மூலம் மூன்று நாட்களுள் அறிவித்தல் வேண்டும்.

*2.2* தேர்தல் நடவடிக்கைக்காக நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ சங்கத்தின் சொத்துக்களையோ அல்லது பணியாளர்களையோ பயன்படுத்துதல் ஆகாது.

*2.3* வேட்புமனு தாக்கல் செய்த பின் சங்க நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாதிருத்தல் வேண்டும்.

*2.4* வேட்புமனுத் தாக்கல் செய்த பின் தேர்தலில் வெற்றி பெறும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் குறித்த உறுப்பினரது பதவி தாமாகவே வெறிதாகியதாகக் கருதப்படும்.

*2.5* தேர்தல் முடிவுற்ற பின்னர் குறித்த சட்டவாக்க அலகுக்கு தேர்வு செய்யப்படாத இயக்குனர் சபை உறுப்பினர் இயக்குனர் சபையின் அனுமதியைப்பெற்று மீளத் தனது சேவையைத் தொடர முடியும்.

***03.* வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ள பணியாளர் -**

*3.1* வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளமையை மூன்று நாட்களுக்குள் சங்கத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

*3.2* இயக்குனர் சபை இவ்வறிவித்தலை ஏற்று தேர்தல் முடிவடையும் வரை உரிய பணியாளருக்கு சம்பளமற்ற லீவு வழங்கலாம். ஆயினும் உரிய பணியாளர் தனக்குரித்தான சம்பளத்துடனான லீவு இருப்பின் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆணையாளர் / කොමසාරිස් / Commissioner – 021 205 7063
உதவி ஆணையாளர் / සහකාර කොමසාරිස් / Asst. Commissioner – 021 227 1418
கணக்காளர் / ගණකාධිකාරී / Accountant – 021 223 2212
பொது / පොදු / Gen – 021 205 7064
தொலைநகல் / ෆැක්ස් / Fax – 021 205 7062
E- Mail: - ccdnp@mail.com
Web: - np.gov.lk

3.3 இக்காலப்பகுதியில் உரிய பதவியில், பதிற்கடமை ஏற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் உரிய பதவி வெற்றிடம் எனக்கருதி பிறிதொரு பணியாளரை சேவையில் ஈடுபடுத்ததுல் ஆகாது.

3.4 குறித்த சட்டவாக்க அலகுக்கு தேர்வு செய்யப்படும் பணியாளர் ஒருவர்

அ. உள்ளூராட்சி நிறுவனமொன்றின் உறுப்பினரொருவராகத் தெரிவு செய்யப்படின் அவர் வகித்த பதவியில் இருக்கும் போதே உள்ளூராட்சி நிறுவனத்தின் கூட்டங்களுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் சேவையின் அவசரத்தேவைகளுக்கு அமைவாக மாதமொன்றிற்கு 05 நாட்கள் சம்பளத்துடனான லீவை அவருக்கு வழங்க முடியும்.

ஆ. பொது மற்றும் மாகாணசபையின் உறுப்பினர் ஒருவராகத் தெரிவு செய்யப்படின் இயக்குனர் சபை அனுமதியுடன் சம்பளமற்ற விடுமுறையில் விடுவிக்கப்படல் வேண்டும். குறித்த பதவிக்காலம் முடிவுற்றதும் இயக்குனர் சபையின் அனுமதியுடன் மீள அதே பதவியில் அமர்த்தப்பட முடியும். அதுவரை குறித்தவரின் பதவிக்கான கடமைகளுக்கென பதிலேற்பாடு செய்யப்படவேண்டும் என்பதுடன் குறித்த ஆளணி நிரந்தர நியமனமொன்றால் நிரப்பப்படலாகாது.

குறித்த விடயம் தொடர்பாக திணைக்களத்தின் 2004.03.12ஆம் திகதிய 04/2004 மற்றும் 2017.12.08ஆம் திகதிய 04/2004(1) இலக்க சுற்றுநிருபங்கள் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றன.

தேவந்தினி பாபு
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாண சபை.

தேவந்தினி பாபு
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாண சபை

*பிரதிகள் –*

1. செயலாளர், மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சு, - தயவுடன் தகவலுக்காக

2. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், ...................... - நடைமுறைப்படுத்துவதற்காக.

3. பணிப்பாளர், மாகாண கூட்டுறவு பயிற்சிக் நிறுவனம், வவுனியா – தகவலுக்காக